අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ යොමුව / எனது இல. / My Ref. | ED/09/02/01/03/009 | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | . | දිනය / திகதி / Date | 2026.07.23 |

சுற்றுநிருப இலக்கம்- 29/2026

ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம்
ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவனம்
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து தேசிய கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதிகள்
ஆசிரியர் கல்லூரிகளின் அதிபர்கள்
அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்கள்

**"நேர்மைக் கலாசாரம் - கிளீன் ஶ்ரீலங்கா" தேசிய வேலைத்திட்டத்தை கல்வித் துறையில் நடைமுறைப்படுத்தல்**

இலங்கையின் ஒட்டுமொத்த அரசாங்கச் சேவையின் தரத்தையும் வெளிப்படைத்தன்மையையும் உயர்த்தும் குறிக்கோளுடன், 'Clean Sri Lanka' செயற்றிட்டத்தின் கீழ், நேர்மையான அரச சேவையை ஏற்படுத்துவதற்கான "நேர்மைக் கலாசாரம் - கிளீன் ஶ்ரீலங்கா " எனும் தேசிய வேலைத்திட்டத்திற்கு இணையாக, எதிர்வரும் 2026 ஜூலை 27 ஆம் திகதி முதல் ஜூலை 31 ஆம் திகதி வரை "தேசிய நேர்மை வாரம்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அனைத்து நிறுவனத் தலைவர்களும் செயற்பட வேண்டும் என அன்புடன் அறியத்தருகின்றேன்.

**01. பாடசாலைகள் தவிர்ந்த இவ்வமைச்சிற்குட்பட்ட அனைத்து நிறுவனங்களும்**

இலங்கை பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வியியல் கல்லூரிகள் உட்பட அமைச்சின் கீழ் உள்ள ஏனைய அனைத்து நிறுவனங்களும் அலுவலகங்களும் பின்வரும் செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய செயற்பட வேண்டும்:

### 1.1 நேர்மை உறுதிமொழி எடுத்தல்:

தேசிய நேர்மை வாரத்தின் ஆரம்ப தினமான 2026 ஜூலை 27 ஆம் திகதி முற்பகல் 09.00 மணிக்கு அனைத்து நிறுவனங்களின் ஊழியர்களும் நிறுவன மட்டத்தில் ஒன்றுகூடி, இச்சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் குறிப்பிட்டுள்ள "தேசிய நேர்மை சத்தியப்பிரமாணம் / உறுதிமொழியை" வாசித்தல் வேண்டும்.

1.2 நிறுவனத் திட்டங்களை தயாரித்தல்:

ஒவ்வொரு நிறுவனமும் தனது ஊழியர்களின் கருத்துக்களையும் பெற்றுக்கொண்டு, நிறுவனத்தின் நேர்மையை உறுதிப்படுத்தும் குறுகிய கால, இடைக் கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். விசேடமாகக் குறுகிய காலச் செயற்பாடுகளின் கீழ் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நிர்வாகத் தடைகளைக் குறைத்தல், சமத்துவம், நிதி ஒழுக்கம் மற்றும் பெறுகை வெளிப்படைத்தன்மை ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமையளித்து நிகழ்ச்சிகளை இனங்கண்டு ஜூலை 27 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்த வேண்டும்.

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

CamScanner

1.3 கிளீன் ஸ்ரீ லங்கா 10 நற்பண்புகள் மற்றும் அறிவித்தல் பதாகையை காட்சிப்படுத்தல்:

தேசிய நேர்மை வாரத்திற்கு இணையாக 2026 ஜூலை 27 ஆம் திகதி முதல் அனைத்து நிறுவனங்களிலும் ஊழியர்கள் மற்றும் சேவையைப் பெறுவோரின் பார்வைக்கு காட்சியளிக்கும் வகையில், இச் சுற்றுநிருபத்தின் இணைப்பு 02 இல் வழங்கப்பட்டுள்ள " கிளீன் ஸ்ரீ லங்கா 10 நற்பண்புகள்" சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக, இணைப்பு 02 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய 6x4 அடி அளவிலான அறிவித்தல் பதாகை ஒன்றையும் நிறுவன வளாகத்தில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.4 நேர்மையை மேம்படுத்துவதற்கான மேலதிக வேலைத்திட்டங்கள்:

மேற்கூறிய அடிப்படைச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, நிறுவனத்திற்குள் நேர்மையான கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக நிறுவன மட்டத்தில் தயாரிக்கப்படும் குறுகிய காலத் திட்டத்தின் கீழ், நேர்மை தொடர்பான கருத்தரங்குகள், விழிப்புணர்வுச் செயலமர்வுகள் மற்றும் ஏனைய பொருத்தமான நடைமுறை வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதாகும்.

**02. பாடசாலைகளுக்கான விசேட அறிவுறுத்தல்கள்**

இத்தினங்களில் நாடு முழுவதும் உள்ள பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களில் நடைபெற்று வரும் தவணைப் பரீட்சை நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு, பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தடங்கல் ஏற்படாத வகையில், பாடசாலைகளில் இந்த தேசிய வேலைத்திட்டத்தை 2026 ஆகஸ்ட் 03 ஆம் திகதி முதல் பின்வருமாறு நடைமுறைப்படுத்த வேண்டும்:

2.1 நேர்மை உறுதிமொழி எடுத்தல்:

2026 ஆகஸ்ட் 03 ஆம் திகதி ஒவ்வொரு பாடசாலையிலும் முற்பகல் 07.30 மணிக்கு குறுகிய பணிக்குழுவிற்கான கூட்டமொன்றை நடாத்தி, இச் சுற்றுநிருபத்தின் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள "நேர்மை சத்தியப்பிரமாணம் / உறுதிமொழியை" வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.2 பாடசாலை நேர்மை கழகங்களை நிறுவுதல்

இவ்வமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 26/2016 இன் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, இந்நேரத்திலும் பாடசாலைகளில் நேர்மைக் கழகங்கள் (School Integrity Clubs) நிறுவப்பட்டு இயங்கி வர வேண்டும். அக் கழகங்களை இதுவரையில் நிறுவாத அனைத்துப் பாடசாலைகளும், உடனடியாக செயற்படும் வகையில் பாடசாலை நேர்மைக் கழகங்களை நிறுவுவதற்கும் அவற்றைச் முனைப்புடன் நடத்திச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.3 பாடசாலை மட்டத் திட்டங்களைத் தயாரித்தல்

பாடசாலைகளில் நிலையான நேர்மைக் கலாசாரத்தை உருவாக்குவதற்காக 2026 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான நேர்மை பற்றிய குறுகிய காலத் திட்டத்தையும், அதற்கு இணையாக நடுத்தர கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களையும் விரைவாகத் தயாரிக்க வேண்டும். இத்திட்டங்களைத் தயாரிக்கும் போதும் நடைமுறைப்படுத்தும் போதும் பாடசாலை நேர்மைக் கழகத்தின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.



CamScanner

2.4 'நேர்மையான சிந்தனைகள்' ஆக்கப்பூர்வப் பலகை

ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்கள் மற்றும் பணியாளர்களிடையே நேர்மை மனப்பாங்கினை உறுதிப்படுத்துவதற்கும் அது குறித்த சிறந்த எண்ணங்களை மேம்படுத்துவதற்கும் "நேர்மையான சிந்தனைகள்" எனும் பெயரில் விசேட ஆக்கப்பூர்வப் பலகை ஒன்று பாடசாலை வளாகத்தில் நிறுவப்பட வேண்டும். அதற்காக மாணவர்களால் சமர்ப்பிக்கப்படும் சித்திரங்கள், கவிதைகள், கட்டுரைகள் போன்ற ஆக்கங்கள் பாடசாலை நேர்மைக் கழகத்தின் வழிகாட்டலின் கீழ் பாடசாலை மட்டத்தில் மாதாந்தம் மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நேர்மை பற்றிய மேம்பட்ட நிறுவன கலாசாரத்தை உறுதிப்படுத்துவதற்கான தொடர்ச்சியான தலையீட்டையும் விழிப்புணர்வையும் உறுதி செய்ய, இந்த ஆக்கப்பூர்வப் பலகையை பாடசாலை நேர்மைக் கழகத்தின் வழிகாட்டலின் கீழ் இற்றைப்படுத்தி பராமரித்து வருவது அத்தியாவசியமாகும்.

"நேர்மைக் கலாசாரம் - கிளீன் ஸ்ரீலங்கா" தேசிய வேலைத்திட்டத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களின்படி செயற்படுவது கட்டாயமாகும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

நாலக களுவேவ
செயலாளர்

பிரதிகள்:

1. அனைத்து மாகாண ஆளுநர்கள்
2. ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதி செயலகம்
3. பிரதமரின் செயலாளர், பிரதமர் செயலகம்
4. செயலாளர், பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
5. அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
6. அனைத்து மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்கள்
7. கணக்காய்வாளர் தலைமை அதிபதி
8. பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய புலனாய்வு ஆணைக்குழு



CamScanner

இணைப்பு 01

**நேர்மை சத்தியப் பிரமாணம்/ உறுதி மொழி - 2026**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்,

கௌரவமிக்க அரச ஊழியராகிய நான்,

கடமைகளின் போது, ஒட்டுமொத்த அரச சேவையின் முன்னேற்றத்திற்காக,

என்னிடம் காணப்படும் குறைபாடுகளையும் பலவீனங்களையும் இனங்கண்டு,

முன்னுதாரணமாக என்னை மாற்றியமைத்துக் கொள்வதற்கும்,

அதற்கேற்ப என்னைச் சுற்றியுள்ள பணிச் சூழலிலும் சமூகத்திலும்,

நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும்,

தனிப்பட்ட நலன்களை விடவும்,

எப்போதும் பொது மக்களின் நலனுக்கு முன்னுரிமை வழங்குவதாகவும்,

எந்தவொரு வெளிப்புறக் கண்காணிப்பும் இல்லாத போதிலும்,

எனது மனச் சாட்சிக்கு இணங்க சுய கட்டுப்பாட்டுடன்,,

எப்போதும் சரியான மற்றும் தார்மீக ரீதியான விடயங்களை மாத்திரமே செய்வதாகவும்,

அரச சேவையின் அடிப்படையான வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறல்,

நிதி ஒழுக்கம் மற்றும் சட்டத்திற்கு மதிப்பளித்தல் ஆகிய விழுமியங்களை,

எனது அன்றாடக் கடமைகளில் பின்பற்றுவேன் என்றும்,

அரச நிர்வாக கட்டமைப்பிலிருந்து இலஞ்சம், ஊழல், வீண் விரயம்,

நலன்களுக்கிடையேயான முரண்பாடு, குடும்பப் பற்று மற்றும் வினைத்திறனற்ற தன்மை,

ஆகியவற்றை முற்றாக ஒழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும்,

என்னை நாடி வரும் ஒவ்வொரு சேவை பெறுநருக்கும்,

எவ்வித பாகுபாடுமின்றி சமத்துவத்துடனும்,

கனிவுடனும் சேவையாற்றக் கடமைப்பட்டுள்ளேன் என்றும்,

“நேர்மைக் கலாசாரம் – கிளீன் ஸ்ரீ லங்கா”

தேசிய செயல்பாட்டுக்கு எனது முழுப் பங்களிப்பை வழங்குவேன்

என்றும் இத்தால் சத்தியப் பிரமாணம் செய்கின்றேன்/ உறுதியளிக்கின்றேன்!



CamScanner

இணைப்பு 02

கிளீன் ஸ்ரீலங்கா 10 நற்பண்புகள் மற்றும் "நேர்மைக் கலாசாரம் - கிளீன் ஸ்ரீ லங்கா" தேசிய வேலைத்திட்டத்தின் அறிவித்தல் பதாகை

தேசிய நேர்மை வாரத்திற்கு இணையாக காட்சிப்படுத்தப்பட வேண்டிய 10 நற்பண்புகள் மற்றும் பதாகைக்குரிய வடிவமைப்பு மாதிரி (Design) என்பவற்றை கீழ்வரும் இணைப்பின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

Link -

https://drive.google.com/drive/folders/1fvGL2tpBUlvUp722FekRk_NxGYhWqSE6?usp=sharing

QR



CamScanner